குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி.எண்.38/2022

எ.ம.சா. 1

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 10–ம் தேதி செவ்வாய் கிழமை எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி.இந்துமதி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது..

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜ்குமார் | தொழில் | |
| தந்தை பெயர் | கோவிந்தசாமி | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.49 மணி,

Complainant Murugesan present. Advocate Mr.C.S.Bhavanirajan present for Complainant. Accused Rajkumar present. Mr.Kalaivarman present for Advocate Mr.Anbarasu for Accused.

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

1) எனக்கு தாரமங்கலம் கிளை தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கியில் வங்கி கணக்கு இருந்தது. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 ஆவணம் என்னுடைய வங்கி கணக்கை சேர்ந்த காசோலை என்றால் சரி. காசோலையின் வங்கி கணக்கை இயற்றுகிற, கையொப்பம் செய்கிற அதிகாரம் எனக்கு இருக்கிறது என்றால் சரி. ம.சா.ஆ–1 ஆவணத்தில் மேலே ஒரு கையொப்பமும் கீழே ஒரு கையொப்பம் உள்ளது என்றால் சரி. மேலே கையொப்பம் செய்த இடம் சிறியதாகவும் கீழே கையொப்பம் செய்த இடம் பெரியதாகவும் உள்ளது என்றால் சரியல்ல. நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 ஆவணத்தில் ரூ.3,00,000/– தொகை மற்றும் காசோலை எண் 168569 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ–4 ஆவணத்தில் குறிப்பிட்டிருக்கும் தொகை ரூ.3,00,000/–ம் மற்றும் காசோலை எண் 168569 என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

2) ம.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள தேதியும் ம.சா.ஆ–4 ஆவணத்தில் உள்ள தேதியும் ஒரே தேதி என்றால் ம.சா.ஆ–1 ஆவணத்தில் உள்ள தேதி ஒரே தேதி என்றால் சரி தான் ஆனால் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி திருத்தம் செய்ததற்கு தான் நான் மேலே கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. நான் காசோலையை கையொப்பம் செய்யவில்லை, 15.02.2022 ம் தேதி காசோலையை புகார்தாரருக்கு கொடுக்கவில்லை. எதிரிதரப்பு குறுக்குவிசாரணையில் பக்கம் எண் 3 ல் பத்தி 7 ல் நான் வெளியூர் சென்றிருந்த சமயத்தில் எனது கடையில் இருந்த காசோலையை எடுத்து முறைகேடாக பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக கேட்கப்பட்டுள்ளது என்றால் சரி. எதிரிதரப்பு குறுக்குவிசாரணையில் பக்கம் எண் 4 ல் பத்தி 8 ல் நான் நொடிப்பு நிலை மனு தாக்கல் செய்திருந்தது தெரிந்தே புகார்தாரர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று கேட்கப்பட்டுள்ளது என்றால் சரி.

3) PW2 குறுக்கு விசாரணையில் பக்கம் எண் 2 ல் பத்தி 5 ல் பழனிசாமியும் புகார்தாரரும் முறைகேடாக என்னிடம் இருந்து காசோலையை எடுத்து வந்து கூட்டாக சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக என்று கேட்கப்பட்டுள்ளது என்றால் சரி. U/s 313 written statement ல் பக்கம் எண் 2 ல் 2 வது வரியில் நான் நொடிப்பு நிலை மனு தாக்கல் செய்தபிறகு ஏற்பட்ட அசாதாரணமான சூழ்நிலையை பயன்படுத்தி 2019 ம் வருடத்திய காசோலையை புகார்தாரர் தேதியை திருத்தி எனது கையொப்பத்தை போலியாக செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரி. புகார்தாரர் எனது காசோலையை எடுத்துவிட்டார் என்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் எனது கடையை கடன் கொடுத்தவர்கள் சேர்ந்து உடைத்ததற்காக புகார் கொடுத்துள்ளேன். மேற்படி சம்பவம் 2019 ம் வருடம் நடந்தது.

4) புகார்தாரர் காசோலையை எடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் அந்த சமயத்தில் நிறைய நபர்கள் கடைக்குள் அத்துமீறி நுழைந்ததால் புகார்தாரர் காசோலையை எடுத்த விபரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு தான் புகார்தாரர் காசோலை எடுத்த விபரம் தெரியும். புகார்தாரருக்கு எதிராக காசோலையை மோசடியாக எடுத்ததாக காவல் நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் இல்லை. எ.மா.ச.ஆ.1 ஆவணத்தில் 47 வரிசையில் புகார்தாரரின் பெயரை முருகேசன் என்பவருக்கு பதிலாக முருகன் என்று குறிப்பிட்டு ஜுலை 2019 ம் வருடம் ரூ.90,000/- கடன் பெற்றதாக சொல்லியுள்ளேன். மேற்படி ஆவணத்தில் ஒரு புரோநோட்டு எழுதி கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. அவ்வாறு கொடுத்து இருந்தால் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

5) எ.மா.ச.ஆ.1 ஆவணத்தில் நான் மொத்தம் ரூ.1,92,53,000/- கடன் பெற்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. மேற்படி கடன் 2019 ம் வருடம் தான் வாங்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி எ.மா.ச.ஆ.1 ஆவணத்தில் கடன் வாங்கிய தேதியை குறிப்பிடவில்லை என்றால் சரி. மேற்படி எ.மா.ச.ஆ.1 ஆவணத்தில் 57 நபர்கள் அல்லாமல் வேறு நபர்களிடம் கடன் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி எ.மா.ச.ஆ.1 ஆவணத்தில் மேற்படி கடனுக்கு ஆவணமாக காசோலை மற்றும் கடனுறுதி சீட்டு கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. அவ்வாறு கொடுத்து இருந்தால் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்கு தாக்கல் செய்திருப்பார்கள் என்றால் சரியல்ல. மேற்படி கடன் நண்பர்கள் மற்றும் சொந்தத்தில் கொடுத்தார்கள். மேற்படி எ.மா.ச.ஆ.1 ஆவணத்தில் பக்கம் 16 பத்தி 63 ல் எனது வாடிக்கையாளர்கள் சேலம், தஞ்சாவூர், திருச்சி மற்றும் மற்ற மாவட்டங்களிலும் இருக்கிறார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரி.

6) மேற்படி எ.மா.ச.ஆ.1 ஆவணத்தில் மேற்படி வாடிக்கையாளர்கள் நகையை கடனாக தவணைமுறையில் வாங்கி சென்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன். அவ்வாறு வாங்கி சென்றவர்கள் நகையை திருப்பி தராததால் எனக்கு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. எனக்கு கடன் தரவேண்டியவர்கள்

விபரங்களை குறிப்பிடவில்லை என்றால் சரி. மேற்படி எ.மா.ச.ஆ.1 ஆவணத்தில் சொத்து சம்பந்தமான விபரத்தில் எனக்கு வரவேண்டிய கடன் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரி. எனக்கு யாரும் கடன் தரவேண்டியதில்லை என்றால் சரியல்ல.

விசாரணை முடிந்த நேரம் மதியம் 01.22 மணி.

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**
விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 02.49 மணி.

7) நான் கடை நடத்தி வந்த சமயத்தில் சீட்டு நடத்தி வந்தேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் நான் கைப்பட எழுதிய சீட்டு சம்பந்தப்பட்ட நோட்டு புகார்தாரருக்கு நான் கொடுத்ததா என்றால் இல்லை. நான் கடன் வாங்கி ஏமாற்றியது அல்லாமல் சீட்டு நடத்தியும் பலரை ஏமாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கடன் வாங்கிய பணத்தில் பிணாமி சொத்து வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கடன் வாங்கி ஏமாற்ற வேண்டும் என்பதற்காக நொடிப்பு நிலை மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் என்னுடைய காசோலையை எடுத்து மோசடியாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளது என்பது ஏற்றுக் கொள்ளதக்கது அல்ல என்றாலும் ஆதாரமற்ற குற்றச்சாட்டு என்றாலும் சரியல்ல.

8) இவ்வழக்கு காசோலையை நானே தேதி திருத்தம் செய்து கையொப்பம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்காக காசோலையை நான் தரவில்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஏமாற்றுப்பேர்வழி என்பது எனது நொடிப்பு நிலை மனுவை வைத்து தெரிகிறது என்றால் சரியல்ல. காசோலை தேதிக்கு முன்பாகவே நான் புகார்தாரருக்கு கொடுக்கவேண்டிய சட்டப்படியாக பகரப் பொறுப்பு இருந்தது என்றால் ரூ.90,000/- க்கு இருந்தது. நட்புரீதியில் அவசர தேவைக்காக கொடுத்த பணத்தை நான் ஏமாற்றுகிறேன் என்றால் சரியல்ல. நான் மாற்றுமுறை ஆவணச்சட்டப்படி தண்டிக்கப்பட வேண்டியவர் என்றால் சரியல்ல. நொடிப்பு நிலை மனுவில் குறிப்பிட்டுள்ள கடனுறுதி சீட்டை புகார்தாரருக்கு நான் தரவில்லை என்றாலும் இவ்வழக்கு காசோலைக்கான ரூ.3,00,000/-க்கு தரவேண்டியது என்றாலும் சரியல்ல.

விசாரணை முடிந்த நேரம் மதியம் 02.57 மணி.

Sd/.S.Sadhamhusain,
Judicial Magistrate,
Fast Track Court,
Omalur.